Trust.O.P.No.61/2023 தேதி – 04.01.2025

ம.சா.–1 சந்தனம் செட்டியார்

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

சொத்து எங்கள் அனுபத்தில் இல்லை, இருப்பினும் நாங்கள் தர்ம காரியங்கள் செய்து வருகிறோம். நாங்கள் தர்மகாரியங்கள் செய்து வருகிறோம் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எங்களை டிரஸ்டியாக நியமிக்கக்கோரி தான் தாவா மனு தாக்கல் செய்துள்ளோம். எனதுமூத்த சகோதரர் பெயர் சண்முகவேல். ம.சா.ஆ.1ன்படி மூத்த ஆண் வாரிசு தான் டிரஸ்டியாக வரவேண்டும் என்றால் சரிதான். சண்முகவேல் இறந்துவிட்டார். அவருக்கு ஒரு மகன், அவர் பெயர் முருகன். அவர் இந்த மனுவில் தரப்பினர் இல்லை. 2,3 எதிர்மனுதாரர்களும் அவரது வகையறாக்களும் சேர்ந்து தர்மத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பல வில்லங்கங்கள் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வில்லங்கங்கள் செல்லாது என்று நாங்கள் எந்த நடவடிக்கையும் நீதிமன்றத்தில் எடுக்கவில்லை என்றால் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கவில்லை, வருவாய் துறை மூலம் நடவடிக்கை எடுத்தோம். வருவாய் துறை மூலம் எதிர்மனுதாரர்களின் நடவடிக்கைகள் செல்லாது என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனு சொத்துக்களை கைப்பற்றி தர்ம காரியங்கள் செய்யவேண்டும் என்று இந்து அறநிலைத்துறை சார்பாக ஒரு தர்மகர்தாவை நியமனம் செய்தார்கள் என்றால் இல்லை. மேற்படி விவரத்தை எதிருரையில் கூறியுள்ள நிலையில் அது உண்மையா பொய்யா என்பதை தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 3ம் எதிர்மனுதாரர் சகோதரர் பெயர் பழனிச்சாமி என்று தான் எனக்கு தெரியும், சேதுகண்ணன் என்ற நபர் இருப்பது எனக்கு தெரியாது. சேதுகண்ணன் என்பவர் உயர்நீதிமன்றத்தில் தர்மகர்தாவை நியமனம் செய்வதை எதிர்த்து ரிட் மனுதாக்கல் செய்து ஸ்டே பெற்றுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. டி ஆர் ஓ உத்தரவின் அடிப்படையில் தாவா சொத்தைப்பொறுத்து பட்டா உள்ளிட்ட அனைத்தும் 1ம் எதிர்மனுதாரர் பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்தைப்பொறுத்து திருவில்லிபுத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.65/2023 என்ற வழக்கை தாக்கல் செய்து பின்பு வத்ராப் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்

அ.வ.எண்.72/2024 என மாறுதலாகியுள்ளது என்றும், மேற்படி வழக்கில் வாதியும், 1 முதல் 6 பிரதிவாதிகள் மட்டுமே டிரஸ்டிகளாக இருந்து தர்மகாரியங்கள் செய்துவருவதாகவும், வழக்கு பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. எதிர்மனுதாரரின் எதிருரையில் அவ்வாறு ஒருவழக்கு நிலுவையில் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள நிலையில், மேற்படி வழக்கில் சேர்வதற்கு நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. ம.சா.ஆ.1ன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும், நாங்கள் டிரஸ்டியாக இருந்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததால் நாங்கள் டிரஸ்டியாக இருப்பதற்கு தகுதியற்றவர்கள் என்றால் சரியல்ல. எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்களை தவிர மற்ற சமுதாயத்தினர் டிரஸ்டியாக இருக்கமுடியாது என்றால் ம.சா.ஆ.1ல் உள்ள 5 நபர்களின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே டிரஸ்டிகளாக இருக்கமுடியும். நான் சொல்வது தவறு என்றும், ம.சா.ஆ.1ன்படி எந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் வேண்டுமானாலும் டிரஸ்டியாக இருக்கலாம் என்றும், டிரஸ்டுகளுக்கு, டிரஸ்டிலிருந்து வரும் வருமானத்தை டிரஸ்ட் காரியங்களை தவிர தனித்து அனுபவித்துக்கொள்ள உரிமை இல்லாததால் ம.சா.ஆ.1 பரம்பரை டிரஸ்ட் அல்ல என்றும், பொது டிரஸ்ட் என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தின் படி டிரஸ்ட் செயல்பட தவறினால் அரசாங்கம் தலையீடு செய்ய உரிமையுண்டு என்றால் சரிதான், தர்மகாரியம் செய்ய சொல்லப்பட்டுள்ளது, சொத்தை வில்லங்கம் செய்ய சொல்லப்படவில்லை. டி ஆர் ஓ உத்தரவின்படி டிரஸ்ட் சொத்து யாருக்கும் கிடையாது என்று கூறிவிட்டதால் 1ம் எதிர்மனுதாரர் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். டி ஆர் ஓ உத்தரவை எதிர்த்து 2,3 எதிர்மனுதாரர்கள் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து அது தற்போது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.